1981 மே 5]

சொந்தக்காரர்கள் வேலிபோட்டு வைத்துவிடுவதாகச் சொல்கிறார்கள். பார்வையாளர்கள் அதை எந்தக்காலத்திலும் பார்ப்பதற்கு வசதி செய்கிற வகையில், அந்த இடத்தை அரசே கையகப்படுத்தி, அந்த இடத்தினை ஒரு பார்வையாளர் இடமாக உருவாக்க அல்லது ஏற்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த இடத்திலே நெடுஞ்சாலைத் துறையினர் ஒரு தகவல் குறிக்கும் அடையாளப் பலகை ஒன்றை நிறுவி இருக்கிறார்கள் என்ற தகவல் இருக்கிறது. இப்போது மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற தகவல்படி அந்த இடம் தனியாருக்குச் சொந்தமான இடமாக இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அது பற்றிய தகவல் இப்போது இல்லை. அதைப்பற்றிய தகவலைச் சேகரித்து, அதற்கான முயற்சிகளை எடுக்கவேண்டிய துறையிடத்தில் சுற்றுலாத் துறை தெரிவிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 9-20]

திரு. ஆர். வெள்ளைச்சாமி : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது அரசு சுற்றுலா இடமாக அறிவிப்பதில்லை என்று சொன்னார்கள். சுற்றுலா இடமாக அறிவிப்பதற்கு என்னென்ன தகுதிகள் வேண்டுமென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, நான் சுற்றுலா ஸ்தலமாக அரசு அறிவிக்கும் திட்டம் இல்லை என்று பதில் அளித்ததிலேயே அது அடங்கிவிட்டது. மீண்டும் அறிவிப்பதற்கு என்னென்ன தகுதிவேண்டுமென்று கேட்கிறார்கள். அறிவிப்பதற்கே திட்டம் இல்லை என்று சொல்லும்போது என்ன தகுதி வேண்டுமென்று கேட்பது சரியல்ல. என்றாலும் விளங்குவதற்காகச் சொல்கிறேன், அது இயற்கையிலேயே மக்களால் வரவேற்கப்பட்டு, மக்களைக் கவர்ந்த அந்த இடத்திற்கு மக்கள் செல்லுகின்ற தன்மை, சூழ்நிலைகளை எல்லாம் பெற்றிருந்தால் ஏற்கெனவே சுற்றுலா ஸ்தலமாக மாறிவிடும்.

நத்தம் கோவில்பட்டியிலுள்ள அருள்மிகு கைலாசநாதர் ஆலயம்.

*வினா எண். 973—திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நத்தம், நத்தம் கோவில்பட்டியில் ஒரு புராதன கைலாசநாதர் கோவில் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது என்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் என்றால் மேற்படி கோவிலைப் பழுது பார்த்து புதுப்பிக்க நடவடிக்கை ஏதும் எடுக்கப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) & (ஆ).—மதுரை மாவட்டம், நத்தம் கோவில்பட்டியிலுள்ள அருள்மிகு கைலாச நாதர் ஆலயத் திருப்பணி வேலைகளுக்கு இந்து சமய அறநிலையத் துறை ஆணையரின் 24-6-1971-ந் தேதிய குறிப்பில் ரூ. 75,800க்கான மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டு ரூ. 16,008·67 செலவு செய்யப்பட்டுள்ளது. திருப்பணி வேலைகள் 1977-இல் இருந்து நடைபெறாமல் இருப்பதாலும், தற்போதுள்ள திருப்பணி குழு செயலற்ற நிலைமையில் இருப்பதாலும் இந்தக்குழுவை கலைத்து விட்டு புதியகுழு அமைத்து எஞ்சியுள்ள வேலைகளை முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மூலம் சென்னையில் நட்சத்திர ஓட்டல்கள் கட்டும் திட்டம்.

*வினா எண். 974—திரு. எஸ். இராசாராம் : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் நட்சத்திர ஹோட்டல்கள் கட்டுவதற்கு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திடம் திட்டங்கள் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) மற்றும் (ஆ)—தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கழகத்துடன் கூட்டாகச் சேர்ந்து சென்னையில், முன்பு ஜனதா ஹோட்டல் கட்டுவதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட இடத்தில் ஒரு ஹோட்டல் வளாகம் (Hotel Complex) கட்டுவதற்கு ஒரு செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. மேலும், சென்னையில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகமே ஒரு நட்சத்திர ஹோட்டல் கட்டுவதற்கு அக்கழகத்தின் இயக்குநர் குழு தீர்மானித்துள்ளது.

திரு. எஸ். இராசாராமன் : தலைவரவர்களே, தனியார் துறையில் பல நட்சத்திர ஓட்டல்கள் சென்னையில் இருக்கின்ற காரணத்தால் இங்கே ஏழை எளிய மக்கள் தங்குவதற்கு குறைந்த வாடகையில் ஓட்டல்கள் கட்டுவதற்கு அரசு உத்தேசித்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS